PUTHIYA THALAIMURAI FOUNDATION

(A People-based movement working for Youth Development, Rural Education, & Healthcare- One of the Largest NGOs in India)
(An ISO 9001: 2015 Certified NGO)

**ISRB EXPO FORUM™**
Indian Small & Rural Business Exposition
(A Unit of Puthiya Thalaimurai Foundation)
(A National Initiative to Promote Small & Rural Businesses)

ADHIYAMAAN COLLEGE OF ENGINEERING HOSUR
ACHIEVE CREATE EXCEL

**"ஏற்றுமதியாளராக வேண்டுமானால் முதலில் ஏற்றுமதி செய்வதற்கு பொருளை தேர்வு செய்ய வேண்டும், பின்னர் அந்த பொருள் எந்த நாடுகளுக்கு அதிகம் ஏற்றுமதி ஆகிறது என்பது போன்ற தகவல்களை சேகரிக்க வேண்டும்."**

*A Report on*

# Seminar on Export Business Opportunities

## ஏற்றுமதி இறக்குமதி தொழில் வாய்ப்புகள் - இரண்டு நாள் கருத்தரங்கம்

**June 15 & 16 2024 | Time: 10.00 a.m. to 5.30 p.m.**

**Adhiyamaan College of Engineering, Dr. MGR Nagar, Hosur**




கிருஷ்ணகிரி மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் எஸ். பிரசன்ன பாலமுருகன் (தமிழக அரசு) அவர்களுக்கு அறக்கட்டளையின் சார்பில் சால்வை அணிவித்த நிகழ்வு




அறக்கட்டளையின் கிருஷ்ணகிரி மாவட்ட கௌரவ அமைப்பாளர் எஸ்.கோபாலகிருஷ்ணன் அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி




டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், Project Officer, Entrepreneurship Development Institute of India (EDII), Salem project office அவர்களுக்கு அறக்கட்டளையின் சார்பில் நினைவுப்பரிசு வழங்கிய காட்சி




எஸ். சிவராமன், Advocate, Consultant & Trainer,. Export - Import / Customs / MSME Chennai அவர்களுக்கு அறக்கட்டளையின் சார்பில் சால்வை அணிவித்த காட்சி







கிருஷ்ணகிரி மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் எஸ். பிரசன்னா பாலமுருகன் (தமிழக அரசு) அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி

டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், Project Officer, Entrepreneurship Development Institute of India (EDII), Salem project office அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உள்ள அதியமான் பொறியியல் கல்லூரியில் புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ மன்றம் சார்பில் ஏற்றுமதி தொழில் வாய்ப்புகள் குறித்த இரண்டு நாள் கருத்தரங்கம் ஜீன் 15 & 16, 2024 (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது. இந்த கருத்தரங்கத்தில் கிருஷ்ணகிரி மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் எஸ். பிரசன்ன பாலமுருகன் (தமிழக அரசு) அவர்கள் சிறுப்பு விருந்தனராக கலந்து கொண்டார்.



தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கி முதல் நிகழ்வாக புதிய தலைமுறை அறக்கட்டளையின் துணைப்பொது மேலாளர் **பி. கணேசன்** அவர்கள் விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்று சிறப்பு விருந்தினர்கள், பயிற்சியாளர் ஆகியோரை அறிமுகம் செய்து வைத்து வரவேற்புரை ஆற்றினார்.



புதிய தலைமுறை அறக்கட்டளையின், பொதுமேலாளர் – திட்டங்கள் **ச.சுரேஷ் கண்னன்**, சிறப்புரையாற்றிய காட்சி பேசுகையில் நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்து வைத்து அதனைத் தொடர்ந்து அறக்கட்டளையின் திட்டங்கள் பணிகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். தொடர்ந்து பேசுகையில் இந்த நிகழ்ச்சி இங்கே சிறப்பாக நடைபெறுவதற்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து அனைத்து உதவிகளையும் மிகச்சிறப்பாக செய்து கொடுத்த அதியமான் பொறியியல் கல்லூரி நிர்வாகத்திற்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.










அறக்கட்டளையின் கிருஷ்ணகிரி மாவட்ட கௌரவ அமைப்பாளர் எஸ்.கோபாலகிருஷ்ணன் அவர்கள் பேசுகையில் அறக்கட்டளையின் சார்பில் 10க்கும் அதிகமான மாணவர்களை ஓசூரில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு டிகிரி படிப்பதற்கு உதவித்தொகை வழங்கப்பட்டதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டார். பின்னர் பன்னிரெண்டாம் வகுப்பிற்கு பிறகு என்ன படிக்கலாம் கருத்தரங்கத்தினை ஓசூரில் உள்ள பள்ளிகளில் நடத்தியதன் மூலம் பயனடைந்துள்ளனர் என்றும், இந்த ஏற்றுமதி கருத்தரங்கம் முதல் முறையாக நமது ஊரில் நடத்துவது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது என்றும் என்னால் முடிந்த பங்கினை அறக்கட்டளைக்கும் அனைத்து நிகழ்விற்கும் அளிப்பேன் என்றும் கூறினார்.

தொடர்ந்து பேசிய டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், **Project Officer, Entrepreneurship Development Institute of India (EDII), Salem project office** அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி பேசுகையில் ஏற்றுமதியாளர்களுக்கு கிடைக்கும் அரசின் மானியங்கள் கடன் திட்டங்கள் மற்றும் மானியம் பெற விண்ணப்பிக்கும் வழிமுறைகள், அரசின் பல்வேறு திட்டங்கள் ஊக்குவிப்பு திட்டங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

கிருஷ்ணகிரி மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளார் எஸ். பிரசன்ன பாலமுருகன் (தமிழக அரசு) சிறப்புரையாற்றிப் பேசுகையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர், தளி, கெலமங்கலம், பேரிகை, பாகலூர் உள்ளிட்ட பகுதியில் நிலவும் குளிர்ந்த சீதோஷ்ண நிலை மலர் சாகுபடிக்கு கைகொடுத்து வருகிறது. குறிப்பாக, ரோஜா மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு, வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.ஓசூர் ரோஜாவுக்கு சர்வதேச சந்தையில் நல்ல வரவேற்பு இருக்கும் என்றும் தெரிவித்தார். மேலும் இம்மாவட்டத்தை பொறுத்த வரையில் ஆட்டோமொபைல் கருவிகள், மேங்கோ பல்ப் போன்ற பல்வேறு ஏற்றுமதி வாய்ப்புகள் உள்ளன. மேலும் அறக்கட்டளையின் இந்த ஏற்றுமதி தொழில் வாய்ப்புகள் கருத்தரங்கத்தினை நல்ல முறையில் பயன்படுத்தி ஏற்றுமதி தொழில் குறித்த தகவல்களை சேகரித்தி விரைவில் நீங்கள் அனைவரும் வெற்றிகரமன ஏற்றுமதியாளராக மாற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். மேலும் பேசுகையில் உங்களைப் போன்ற தொழில்முனைவோர்களுக்கு பல்வேறு நலதிட்டங்கள் மாவட்ட தொழில் மையத்தில் இருக்கிறது என்றும் தொழில் மையத்தின் பணிகள், திட்டங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். அத்திட்டங்கள் மூலம் உங்களுக்கு உதவ நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றும் கூறினார்.

இந்த இரண்டு நாள் கருத்தரங்கில் எஸ். சிவராமன், Advocate, Consultant & Trainer,. Export - Import / Customs / MSME Chennai அவர்கள் பேசுகையில் ஏற்றுமதி வர்த்தக வாய்ப்புள்ள பொருட்களையும் நாடுகளையும் கண்டறியும் முறைகள், ஏற்றுமதி செய்வதற்கு என்ன என்ன பொருட்கள் எந்த நாடுகளுக்கு அதிகம் ஏற்றுமதி ஆகிறது போன்ற தகவல்களை தெரிந்து கொள்ள www.exportpotential.intracen.org என்ற இணையதளத்தின் மூலம் கண்டுபிடிக்கும் வழிமுறைகளை தெளிவாக எடுத்துரைத்தார்.

ஏற்றுமதி தொழில் தொடங்குவதற்கு முதலில் பொருளை



தேர்ந்து எடுக்க வேண்டும், பின்னர் சரியான திட்டமிடல் வேண்டும், சிறிய அளவில் ஏற்றுமதி தொழிலை தொடங்கி மெதுவாக விரிவுபடுத்த வேண்டும் என்று கூறினார். பொருளுக்கு விலை நிர்ணயம் செய்யும் வழிமுறைகள், பொருட்களுக்கு காப்பீடு செய்யும் வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைத்தார். இறக்குமதியாளரை அடையாளும் காணும் வழிமுறைகள், ஏற்றுமதி சந்தை வாய்ப்புகள் அதிகம் உள்ள நாடுகள், நிறுவனத்தை பதிவு செய்யும் வழிமுறைகள், ஏற்றுமதிக்கு தேவையான ஆவணங்களை தயார் செய்யும் வழிமுறைகள் மற்றும் Export & Import Promotion Council இன் பணிகள் மற்றும் அதில் உறுப்பினராகும் வழிமுறைகள், அதன் மூலம் கிடைக்கும் பயன்கள், பொருட்களை வெளிநாடுகளுக்கு கப்பல் மற்றும் விமானம் மூலம் அனுப்பி வைக்கும் வழிமுறைகள் குறித்தும் விரிவான தகவல்களை எடுத்துரைத்தார்.

மேலும் பல்வேறு இணையதளங்கள் –ஏற்றுமதி & இறக்குமதி குறித்த சர்வதேச வர்த்தகத் தகவல்கள் / புள்ளிவிவரங்களை www.trademap.org www.commerce.gov.in, போன்ற இணையதளங்களின் மூலம் தெரிந்து கொள்ளவது எப்படி என்றும் விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும் பல்வேறு ஏற்றுமதி தொடர்பான இணையதளங்கள் www.eximmitra.in, www.dgft.gov.in www.agmarket.gov.in, www.enam.gov.in/web www.tradestat.commerce.gov.in www.fieo.org , www.cogoport.com, www.tradingeconomics.com போன்றவற்றில் உள்ள தகவல்கள் குறித்தும் கூறினார்.

மேலும் இக்கருத்தரங்கில் 10க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்கள் தங்கள் பொருட்களை (பருப்பு வகைகள், அப்பளம், எண்ணேய் வகைகள், 90ஸ் கிட் சாக்லேட்டுகள், வெள்ளி கொலுசுகள், வின்னர் லீப் வலி நிவாரண தைலம்) ஸ்டால் மூலம் காட்சிபடுத்தியிருந்தனர். இக்கருத்தரங்கில் தென்காசி, சேலம், சென்னை, திருவள்ளூர், மதுரை, விருதுநகர், திருச்சி, கிருஷ்ணகிரி, கரூர், திண்டுக்கல், விழுப்பரம், நாகப்பட்டினம், வேலூர், காஞ்சிபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி போன்ற ஊர்களில் இருந்து 100க்கும் மேற்பட்ட சுயதொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர். இரண்டாம் நாள் மாலை 4.30 மணியளவில் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு பங்கேற்புக்கான சான்றிதழும், ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ மன்றத்தின் உறுப்பினர் அட்டையும் வழங்கப்பட்டது.

## கலந்து கொண்ட பயனாளிகளின் கருத்துக்கள்



கே.ராஜேஷ் பிரபு

திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த கே.ராஜேஷ் பிரபு பேசுகையில் இக்கருத்தரங்கம் மூலம் ஏற்றுமதி வணிகத்தைப் பற்றியும் தொழில் தொடங்குவதற்கான வழிமுறைகள் குறித்து தெரிந்து கொண்டதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். துறை சார்ந்த அனுபவம் கொண்ட பயிற்சியாளர், மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் மூலம் ஏராளமான பயனுள்ள தகவல்கள் கிடைப்பெற்றோம்.

அறக்கட்டளை சிறிய விசயங்களில் கூட கவனம் செலுத்தி அனைத்து ஏற்பாடுகளையும் மிகச்சிறப்பாக செய்து இருந்தது. குறிப்பாக (உணவு, சிற்றுண்டி, தேநீர், காபி, தண்ணீர் போன்றவை) எந்த ஒரு தடங்கலும் இல்லாமல் வழங்கப்பட்டுள்ளன. அறக்கட்டளையின் பணிகள் தொடரட்டும் கூறி தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார்.



அ. ஹரினி

சென்னையைச் சேர்ந்த அ. ஹரினி (12 ஆம் வகுப்பு) படிக்கும் மாணவி கூறுகையில் இயல்பாகவே எனக்கு ஒரு பெண் தொழில் முனைவோராக வேண்டும் (ஏற்றுமதி துறையில்) என்ற ஆசை எனக்கு இருந்தது. அறக்கட்டளையின் இந்த ஏற்றுமதி கருத்தரங்கம் குறித்து கேள்விப்பட்டு இக்கருத்தரங்கத்தில் கலந்து கொண்டதன் மூலம் ஏற்றுமதிக்கு பொருட்களை தேர்ந்தெடுப்பது குறித்து ஒரு தெளிவான வழிகாட்டுதல் கிடைப்பெற்றேன். மேலும் இறக்குமதியாளரை நாமே பல்வேறு இணைதளங்களை பயன்படுத்தி கண்டுபிடிக்கும் வழிமுறைகள், ஏற்றுமதிக்கு ஆர்டர் எடுக்கும் முறைகள் குறித்து தெளிவாக பயிற்சியாளர் சிவராமன் அவர்கள் எடுத்துரைத்தார்கள். எதிர்காலத்தின் என் படிப்பை முடித்தவுடன் ஏற்றுமதி துறையில் கால்பதித்து வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையை எனக்குள் விதைத்த பயிற்சியாளர் அவர்களுக்கும் அறக்கட்டளைக்கும் தன்னுடைய நன்றியினை தெரிவித்துக்கொண்டார்.








புதிய தலைமுறை அறக்கட்டளை
எண்: 24, ஜி.என். செட்டி சாலை, சென்னை- 600017 | அலைபேசி: 8754417500 / 8754417322
மின்னஞ்சல்: isrbexpo@ptfindia.org | வலை: www.isrbexpo.org, www.ptfindia.org